*கவனிக்க.-* 02.01.2026 ஆம் திகதிய 2470 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2473 - 2026 ජනවාරි මස 23 වැනි සිකුරාදා - 2026.01.23**

2473 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 40 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 41 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, சனவரி மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, சனவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


39 - B82754 - 5403 (2026/01)

# மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மாகாண மாகாண சபை**

வடமாகாண கௌரவ ஆளுநரின் அறிவித்தல்

1 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1947 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம் ) 277(1A) பிரிவின் கீழ் நடத்தப்படும் விசாரணை

2. வடமாகாணத்தின் ஆளுநரான நாகலிங்கம் வேதநாயகன் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1947 ஆம் ஆண்டி 29 ஆம் இலக்க, மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 277 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் (252 ஆம் அத்தியாயம்) 277 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு அமைவாக கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள்/குற்றச்சாட்டுகள் தொடர்பாக வவுனியா மாநகர சபையின் செயற்பாடுகளை ஆராய்ந்து, பரிசோதித்து, விசாரணை செய்து இரண்டு மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 277 ஆம் பிரிவின் (IA) (B) ஆம் உப பிரிவிற்கமைவாக தனிநபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிமன்ற நீதிவான் திரு. கந்தையா அரியநாயகம் அவர்களை நியமித்துள்ளேன்.

3. விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுகள்

I. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வவுனியா மாநகரசபைக்கு சொந்தமான காணி நிலத்துண்டங்களாக பிரித்து வியாபாரிகளுக்கு வழங்கும் போது மாநகரசபைகள் கட்டளைச்சட்டம் பிரிவு 40(1)(f) பிரகாரம் உரிய அனுமதி பெற்றுக்கொள்ளாது வழங்கியதன் மூலம் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை துஸ்பிரயோகம் செய்தமை

II. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வவுனியா மாநகரசபைக்கு சொந்தமான காணி நிலத்துண்டங்களாக பிரித்து வியாபாரிகளுக்கு வழங்கும் போது சபை தீர்மானம் நிறைவேற்றப்படாது வழங்கியதன் மூலம் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை துஸ்பிரயோகம் செய்தமை.

III. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வவுனியா மாநகரசபைக்கு சொந்தமான காணி நிலத்துண்டங்களாக பிரித்து வியாபாரிகளுக்கு வழங்கும் போது அரச பெறுகை நடைமுறைகளை பின்பற்றாது வழங்கியதன் மூலம் கடமைகளை புரிவதில் பிறழ் நடத்தை.

IV. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வவுனியா மாநகரசபைக்கு சொந்தமான காணி நிலத்துண்டங்களாக பிரித்து வியாபாரிகளுக்கு வழங்கும் போது நிபந்தனை குறித்து கையொப்பமிட்டு ஒப்பந்தம் எதுவும் செய்யாது வழங்கியதன் மூலம் தகுதியின்மையும் பிறழ்முகாமைத்துவம் செய்தமை.

V. பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள வவுனியா மாநகரசபைக்கு சொந்தமான காணி மதிப்பீடு செய்யாதும் நிலத்துண்டங்களாக பிரித்து வியாபாரிகளுக்கு வழங்கும் போது அரச விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் காணித்துண்டங்கள் விலை குத்தகைக் கட்டணங்கள் எவையும் அறவீடுசெய்யாதும் வழங்கி கடமைகளை புரிவதில் பிறழ் நடத்தை.

VI. திருநாவற்குளம் பிரதான கால்வாய் தூர்வாரல் வேலை மற்றும் திருத்தவேலை தொடர்பான செலவினை சபைதீர்மானம் நிறைவேற்றப்படாது செய்ததன் மூலம் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களை துஸ்பிரயோகம் செய்தமை.

VII. திருநாவற்குளம் பிரதான கால்வாய் தூர்வாரல் வேலை திருத்த வேலை மேற்கொள்வதற்கு பண்டாரவன்னியன் சனசமூக நிலையத்திற்கு வழங்கப்பட்டு 15.09.2025 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் மாநகர முதல்வர் மட்டுமே கையொப்பமிட்டுள்ளார். மாநகர ஆணையாளர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்காது வேலை வழங்கியதன் மூலம் மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 227 ஆம் பிரிவின் ஏற்பாட்டிற்கு முரணாக செயற்பட்டமை.

VIII. திருநாவற்குளம் பிரதான கால்வாய் தூர்வாரல் மூலம் அள்ளப்பட்ட மண் கணிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு கணிய அளவு எடுக்கப்படாது அள்ளப்பட்ட மண் பல்வேறு இடங்களில் கொட்டப்பட்டதன் மூலம் கடமைகளை புரிவதில் பிறழ் நடத்தை.

நாகலிங்கம் வேதநாயகன்,
வடமாகாண ஆளுநர்.

ஆளுநர் செயலகம்,
பழைய பூங்கா,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்,
2025, திசெம்பர் 31.

01 - 129

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**மத்திய மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III/ ஒரு வருட பயிலுநர் தரம்/ இரண்டு வருட பயிலுநர் தரம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்தல் (திறந்த) - 2025 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியினை நீடித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2,468 மற்றும் 2025.12.19 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் மாகாண சபைப் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண தொழிநுட்ப சேவையில் (சிவில்) தரம் III /ஒரு வருட பயிலுநர் தரம் / இரண்டு வருட பயிலுநர் தரம் பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் -2025 போட்டிப் பாட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியானது 2026.01.23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத் தருகின்றேன்.

02. அவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் எத்தகைய மாற்றமும் இன்றி அவ்வாறே திகழும் எனவும் இந்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. கே. ஜி. ஐ. டி. பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகான சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

01 - 174/1

---

திருத்தம்

**மத்திய மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

மத்திய மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவைப்பிரிவின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர்/ (Quantity Surveor) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2025

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2,468 மற்றும் 2025.12.19 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் மாகாண சபைப் பிரிவின் கீழ் பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண பொறியியல் சேவைத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உவியாளர் தொழிநுட்ப சேவைப் பிரிவின் தொழிநுட்ப உத்தியோகத்தர் (கணிய அளவையாளர் தரம் III பதவியில் நிலவும் வெற்றிடங்களை திரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும் நிறுதித் திகதியானது 2026.01.23 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.

02. அவ் ஆட்சேர்ப்பு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் எத்தகைய மாற்றமும் இன்றி அவ்வாறே திகழும் எனவும் இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

03. ஏற்கனவே இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களைச் சமரப்பிக்க வேண்டாம் என இத்தால் அறியத் தருகின்றேன்.

கே. கே. ஜி. ஐ. டி. பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகான சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244,
கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.

01-174/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.